(இ) இந்தத் திட்டம் படிப்படியாக செயலாக்கப்படுகிறது.
துவரை மூன்று படிவங்களுக்கான வேலைகளுக்கு அரசு ஒப்புதல்
ளித்துள்ளது. எஞ்சியுள்ளவைகளுக்கு பின்வரும் படிவங்களில்
புதல் அளிக்கப்பட வேண்டும். எல்லா வேலைகளையும் உடனே
த்துச் செயலாக்க போதிய நிதி வசதி இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்த விவரப் பட்டி
யில் ஏறத்தாழ 17 சாலைகளை எடுத்துக்கொள்ளலாம் என்ற விவ
த்தை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். இதில் பாதி
லைகளையாவது உடனடியாக எடுத்துக்கொள்வதற்கு ஏதுவான
றையில் இந்த வேலைகளை ஃபேஸ்ட் புரோகிராமில் சேர்த்துக்
ாள்ள அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்
ா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு
றுப்பினர் தெரிவித்த யோசனை கருத்திற் கொள்ளப்படும்.

Madurai Meenakshi Temple

* 201 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon.
e Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal to illuminate Sri
eenakshi Temple at Madurai with financial assistance from the
rla Charity Trust, Calcutta; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) மதுரை அருள்திரு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்
காயிலிலுள்ள மின் இணைப்பு கம்பிகள் மிகவும் பழமையானவை.
வை சேதமடைந்துள்ளன. மேற்படி மின் இணைப்புகளை சீர்
ருத்தும் வேலைக்கு சுமார் ரூ. 3.5 இலட்சம் செலவு ஆகும் என
திப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வேலையை உபயமாகச் செய்து
கல்கத்தாவிலுள்ள பிர்லா தரும நிறுவனத்தினர் ஒப்புதல்
ளித்துள்ளனர். பிர்லா தரும நிறுவனத்தின் மின் பொறியா

1975 நவம்பர் 5]

ளர்கள் மேற்படி திருக்கோயிலே 18—1—1975 அன்று பார்வையி
மின் இணைப்பு வேலைகளுக்கான வரைபடம், மதிப்பீடுகள் முத
வற்றை ஆராய்ந்துள்ளனர். இதுபற்றி இந்நிறுவனத்தின் ப
கோயில் எதிர்பார்க்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: அதற்கு 3½ லட்சம் போதும
தல்ல—இன்னும் அதிகமாகும் என்று சொல்லப்படுகிறதே, சர்க்
எண்டோமெண்ட் போர்டிலிருந்து செலவு செய்ய உத்தேசித்தி
கிறதா? இல்யூமினேஷன் என்று சொல்லி இருந்தார்கள்.
எந்தவிதமான இல்யூமினேஷன் என்பதை கனம் அமைச
அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இது
கனவே செய்யப்பட்டிருக்கிற மதிப்பீடு. இந்த ஆண்டு—அதா
18—1—1975 தான் பார்வை இடப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டி
கிறது. பார்வை இட்ட அந்த மதிப்பீட்டில் ரூ. 3½ லட்சம்
வாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதிகமாக
வாகும் என்ற பிரச்சினை எழவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, மதுரை மீன
அம்மன் கோயிலில்—பிரதான கோயிலில்—பண அதிபர்கள்
மாதிரி வெளிச்சம் போடக்கூடிய ஏற்பாடுகளைச் செய்கிறா
என்று சொல்லப்படுகிறது. அவர்கள் தர்மசாலைகளையும்
யிருக்கிறார்கள். அந்த தர்மசாலாக்கள் கோயிலின் நேரடி
கண்காணிப்பிற்குள் கொண்டு வரப்படுகிறதா? இல்லை என்
நேரடி கண்காணிப்பிற்குள் கொண்டுவர ஏற்பாடுகள் செ
படுமா? பிர்லா அந்த தர்மசாலாவை கட்டியிருப்பதாக
கிறேன். அது தர்மசாலாவாக இல்லாமல் ஒரு ரெஸ்ட் ஹவு
லாட்ஜிங் ஹவுஸ் மாதிரித்தான் இருக்கிறதே தவிர வாக்க
பிரயாணிகளுக்கு உதவி செய்யக்கூடிய அளவில் இல்லை என்
இந்த அரசுக்கு தெரியுமா? அவர்கள் சில மின்சார வி
களைப் போட்டிருக்கிறார்கள். அப்படிப் போட்டதால் கோயி
புராதனத் தன்மையை மாற்றக்கூடிய நிலை ஏற்படுகிறது. ஆ
இதை, நிர்வாகஸ்தர்களை கலந்துகொண்டு மாற்றுவ
அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா? பணம் கொ
றார்கள் என்ற காரணத்திற்காக, இப்படி திடீர், திடீர் என்று
தல்களைச் செய்வதற்கு உத்திரவுகளை போடாமல் இருக்க ஏத
செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 நவம்பர் 5

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இப்படிப் பட்ட மின் விளக்குகளைப் போடுகின்ற காரணத்தால் புராதனத் தன்மை பாதிக்கப்படுவதில்லை. ஏற்கனவே, பல தர்ம நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் திருவரங்கத்தில் இருக்கிற ரெங்கனாதர் திருக்கோயிலிலும் திருவாடானை கோயிலிலும், திருச்சி மலைக்கோட்டைக் கோயிலிலும் இப்படிப்பட்ட பணிகளைச் செய்திருக்கிறார்கள். மதுரையில் தனியார் கட்டியுள்ள பிர்லா விஷ்ரத்தைப் பற்றி கூறினார்கள். அது கோயிலின் நிர்வாகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயல்பட்டு வருகிறது. அதன் வருமானம் முழுவதும் கோயிலின் நிர்வாகத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு கண்காணிக்கப் பட்டு வருகிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் சுற்று வட்டாரத்தில் வருகின்றபோது இருள் சூழ்ந்து காணப்படுகிறது. அதனால் சுற்றி வருவதற்கு பயம் ஏற்படும். அப்படிப்பட்ட இருள் சூழ்ந்தப் பகுதிகளில்தான் கோயில் பெருச்சாளிகள் நடமாடுகின்றன. அந்தப் பெருச்சாளிகளை அங்கு பதுங்க விடாமல் விரட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பெருச்சாளிகள் எங்கு பதுங்கினாலும் இந்த அரசு விடாது.

திரு. சொ. காவேரிமணியம் : தலைவரவர்களே, மீனாட்சி அம்மன் கோயிலில் மின் விளக்கு அலங்காரம் பிர்லா அறக் கட்டளையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட ஏற்பாடுகள் அருகாமையில் இருக்கக்கூடிய அருள் மிகு சுப்பரமணியர் கோயிலுக்கும் செய்யப்பட திட்டம் ஏதேனும் இருக்கிறதா ? இல்லை என்றால் இப்படிப்பட்ட ஏற்பாட்டை அரசு தன்னுடைய திட்டங்களில் சேர்த்துக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்தக் கோயிலுக்கு உதவி செய்யுமாறு யாரிடத்திலும் கேட்கப்படவில்லை.